## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 19–ம் நாள் சனிக்கிழமை வாதி தரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **மாலதி (திருப்பாச்சேத்தி தெற்கு VAO)** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**19.07.2025 OS.No. 16/2020 வா.சா.2 ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2 ம் சாட்சி ஆவேன். நான் திருப்பாச்சேத்த தெற்கு குருப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் . நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா புல எண்.76/13 என்ன வகை நிலம் என்றால் நத்தம் நிலவரித் திட்ட துூய அடங்கல் பதிவேட்டில் ரயத்து புஞ்சை என உள்ளது . **மேற்படி ஆவணம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புல எண்.76/13 பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் நத்ததில் துூய அடங்கல் சிட்டா தான் உள்ளது . துூய அடங்கல் சிட்டாவில் தற்போது கோர்ட்டில் வழக்கு உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கோர்ட்டில் வழக்கு உள்ளது என குறிப்பு ஏற்படுவதற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் ஆனந்தன் மனைவி பிச்சையம்மாள் பெயரில் பட்டா இருந்தது. எதன் அடிப்படையில் ஆனந்தன் மனைவி பிச்சையம்மாள் பெயர் பட்டாவில் நீக்கப்பட்டது என்றால் அது சம்பந்தமான குறிப்புகள் என்னிடம் இல்லை. கோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள துூய அடங்கல் சிட்டாவில் வேறு ஏதேனும் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் புல எண்.76/14 ம் கோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது . மேற்படி புல எண்.76/13, 76/14 ல் வீடு உள்ளதா அல்லது காலிமனையாக உள்ளதா என்றால் வீடும் காலிமனையிடமாகவும் உள்ளது. அது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பதை அளந்து பார்த்தால் தான் தெரியும். மேற்படி புல எண்.76/13,76/14 ல் என்ன வீடு உள்ளது என்றால் தார்சு வீடும் உள்ளது காலி மனையிடமும் உள்ளது. புல எண்.76/13 ல் ஓட்டு வீடும் புல எண்.76/14 ல் தார்சு வீடும் சிறிது காலியிடமும் உள்ளது என்றாலும் , மேற்படி விபரங்களை தெரிந்து கொண்டே நான் சொல்ல மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam